கழுத்துறை மாவட்டத்தின் 20 கமநலசேவை குழுக்கம் - 2024

---

1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 கழுத்துறை மாவட்டத்தின் 20 கமநலசேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2024 ஆண்டு தொடர்பான கழுத்துறை மாவட்டத்தின் 20 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 02 குழுக்களின் அபிப்பிராயம் பாதகமாக இருந்ததுடன் 08 குழுக்களின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் 10 குழுக்களுக்கு முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்படுவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

1.3 நிதிக்கூற்றுக்கள்

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 99 முதல் 139 வரையான பிரிவுகளின் பிரகாரம் 20 குழுக்களிலும், கமநல வங்கியினால் நிதிக்கூற்றுக்களுடன் நிதி செயலாற்றுகை கூற்று தயாரித்திருக்கவில்லை.	திணைக்களத்தினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி தயாரிக்கப்பட்டது. எதிர் காலத்தில் சரியாக தயாரித்து சமர்ப்பிக்கின்றேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 118 முதல் 125 வரையான பிரிவுகளின் பிரகாரம் 2024 ஆண்டிற்கான 20 குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளுக்காகவும், தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் பிரதான காசுப்பாய்ச்சலை இனங்கண்டு	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன்

	வகைப்படுத்தாமல் 11 கமநல வங்கிகள் மற்றும் 04 குழுக்களின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.		பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட அனைத்துக் கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுத் தொகுதியில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 07 குழுக்களின் மற்றும் 09 கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்களில் அனைத்து கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்பிட்டப்பட்டிருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	16 கமநல சேவை வங்கிகளின் 2024 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ரூபா 82,000 தொகைக்கான அட்டுறுச் செலவுகள் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2023 ஆண்டிற்குரிய 2024 ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 80,000 இற்கான செலவு மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	அட்டுறுச் செலவுகள் குறிப்பிட்ட கணக்காண்டு தொடர்பாக கணக்கீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்தக்கூடிய உள்ளக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	16 குழுக்களுக்களில் 2024 ஆண்டு தொடர்பாக 2025 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை 3,169,338 இற்கான அட்டுறுச் செலவுகள் 2024 ஆண்டுக்குரிய செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால், அட்டுறுச் செலவுகள் குறைவாகவும், மிகைகள் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.	கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	- மேற்படி -

(இ)	2024 ஆண்டின் போது 13 கமநல வங்கிகள் தொடர்பாக கணினி துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 520,317 இற்கான தொகையொன்று மற்றும் 2023 ஆண்டின் போது அதே விடயத்திற்காக 10 கமநல வங்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,942,050 இற்கான தொகையொன்று திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் அந்தப் பெறுமதியினால் திரண்ட நிதியம் மற்றும் சொத்துக்கள் கணக்கின் மீதி குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	தலைமை அலுவலகத்திலிருந்து ஆலோசனை பெற்று சரி செய்கின்றேன்.	திரண்ட நிதியக் கணக்கு மீதி மற்றும் சொத்துக்கள் கணக்கு மீதி சரி செய்யப்பட வேண்டும்.
(ஈ)	கோப்புக்களின் மூலம் அல்லது வேறேதும் முறையில் உறுதிப்படுத்தப்படாத 17 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 8,225,653 தொகைக்கான பொறுப்புக்கள் மற்றும் 18 குழுக்களில் பௌதீக ரீதியான காணப்படாத கூட்டுத்தொகை ரூபா 7,082,815 இற்கான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என உட்படுத்தப்பட்டிருந்தது.	போலியான சொத்துக்கள் மற்றும் போலியான பொறுப்புக்களை அகற்றி கணக்கீடு செய்யப்படும்.	முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீதிகளை உறுதிப்படுத்திய பின்னர் நிதிக்கூற்றுக்கள் சரி செய்யப்பட வேண்டும்.
(உ)	2024 ஆண்டின் ஏக்கர் வரி வருமானம் கணக்கீடு செய்யும் போது 12 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 554,396 தொகை குறைவாகவும், மேலும் 06 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 192,345 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கண்டறிந்து சரி செய்வேன்.	முறையான விசாரணை மேற்கொண்டு கணக்காண்டிற்குரிய சரியான ஏக்கர் வரி வருமானத்தை இனங்கண்டு கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும்.
(ஊ)	இத்தேபான குழுவினால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 144,437 இற்கான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்து சொத்துக்கள் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால்	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	முறைப் பிரகாரம் கணக்குகள் சீராக்கல் செய்து இந்த நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தலை செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்ததை சரி செய்ய வேண்டும்.

சொத்துக்கள் கணக்கு மீதி மற்றும் மிகை அந்த எண்ணிக்கையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. மேலும், கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.		

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
11 குழுக்களில் 36 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கையிடையே மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,520,471 இற்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	2025 கணக்கு அறிக்கையில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்னே.	முறைப் பிரகாரம் செயற்பட்டு கணக்குகள் அல்லது நேரொத்த அறிக்கைகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.3.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் கணக்கீடு செய்யும் போது நாட்குறிப்புப் பத்திரங்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொண்டு கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 05 கமநல வங்கிகள் மூலம் கணக்கீடு செய்யப்பட்ட 261 நாட்குறிப்புப் பதிவுகளுக்காகவும் 03 குழுக்கள் மூலம் 2024 ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்ட அனைத்து நாட்குறிப்புப் பதிவுகளுக்கான நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் போடப்படல் மற்றும் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் அந்த கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டின் போது நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்ட அங்கீகாரம் பெறப்பட்டு கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்வேன்.	இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கும், நாட்குறிப்பு பதிவுகள் இடும் போது துணை ஆவணங்களுடன் நாட்குறிப்பு உறுதிச் சீட்டு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் நாட்குறிப்புப் பதிவுகள் இடப்படுகின்றதென உறுதிப்படுத்தும் வேலைத் திட்டமொன்று தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.3.5 தொங்கல் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் தொங்கல் கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டிய போதிலும், இத்தேபான கமநல வங்கியின் ரூபா 52,614 இற்கான தொங்கல் கணக்கு மீதியொன்று மற்றும் வலகெதர குழுவின் ரூபா 30,806 இற்கான தொங்கல் கணக்கு மீதியொன்று இனங்கண்டு தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.	2025 ஆண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	முறையான பரிசோதனை மேற்கொண்டு தொங்கல் கணக்கு மீதிகளை இனங்கண்டு பேரேட்டை சரி செய்த பின்னர நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.3.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 09 கமநல வங்கிகளின் நிதி நிலைமைக்கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 55,906,253 தொகைக்கான 1709 விவசாயிகளுக்கு வழங்கியிருந்த பலவின கடன் மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக போதியளவு எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன்.	கடன் மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 கமநல வங்கிகளின் நிதி நிலைமைக்கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 30,113,027 இற்கான 2743 விவசாயிகளுக்குரிய பலவின வைப்பு மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக போதியளவு எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வைப்பு மீதிகளை பரிசோதனை செய்வதற்காக தேவையான சான்றுகளை சமர்ப்பிக்கின்றேன்.	- மேற்படி -
(இ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 கமநல வங்கிகளின் நிதி நிலைமைக்கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 7,784,722 இற்கான 7304	பங்கு மீதிகளை பரிசோதனை செய்வதற்காக தேவையான சான்றுகளை சமர்ப்பிக்கின்றேன்.	பங்கு மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக கணக்காய்வினால் வேண்டப்பட்டுள்ள

	விவசாயிகளுக்குரிய பங்கு மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக போதியளவு எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 கமநல வங்கிகளின் நிதி நிலைமைக்கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 8,464,121 இற்கான 8692 விவசாயிகளுக்குரிய சாதாரண நபர் வைப்பு மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக போதியளவு எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சாதாரண நபர் வைப்பு மீதிகளை பரிசோதனை செய்வதற்காக தேவையான சான்றுகளை சமர்ப்பிக்கின்றேன்.	வைப்பு மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக கணக்காய்வினால் வேண்டப்பட்டுள்ள எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(உ)	பண்டாரகம குழுவின் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் என பதிவு செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 1,290,780 இற்கான அலுவலக உபகரணங்கள் மற்றும் பல்வேறு சொத்துக்களுக்குரிய அட்டவணைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அதன் உண்மைத் தன்மையை பரிசோதனை செய்ய முடியாமல் இருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	சொத்துக்களின் பௌதீக பரிசோதனை தொடர்பாக போதியளவு எழுத்துமூல சான்றுகள் அல்லது கணிப்பீட்டு சபை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அட்டவணைகள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஊ)	பாடாகொட, பெலவத்த, புலத்சிங்கல, மில்லெனிய ஆகிய கமநல வங்கிகளின் செயற்திட்டக் கடன், விவசாயக் கடன், தொழில் முயற்சிக் கடன், சாரலங்கா கடன் மற்றும் மகளிர் விவசாய அமைப்புக்களின் வைப்புக்கள் உப பேரேட்டுக் கணக்கு 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமப்படுத்தியிருக்காமையால், 2024 நிதிக்கூற்றுக்களுடன் காணப்பட்ட அந்த அட்டவணைகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்ய முடியாதுள்ளது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	முறைப் பிரகாரம் செயற்பட்டிருக்காத மற்றும் அவற்றை கண்காணிப்பு செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் உப பேரேட்டுக் கணக்குகள் வருடாந்தம் சமப்படுத்துவதை உறுதிப்படுத்தும் செய்முறையொன்றை நிறுவுதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்**			
	பிரிவு 56	11 கமநல சேவைக் குழுக்களின் மூலம் சட்ட ரீதியாக அறவீடு செய்யப்பட வேண்டிய அனைத்து ஏக்கர் வரி தொகையும் உரிய முறையில் அறவீடு செய்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன்.	கால ரீதியாக ஏக்கர் வரி அறிவீடு செய்யாத உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் தொகுதி II			
	அத்தியாயம் XLVII மற்றும் XLVIII இன் பிரிவு 31:1.7	மொரன்துடுவ மற்றும் பெலவத்த கமநல வங்கிகளில் கடமையாற்றிய விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தரினால் கமநல வங்கியின் பணம் முறையற்ற விதமாக பயன்படுத்தப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன். அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுப்பேன்.	தாபனக் கோவையின் பிரகாரம் முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஒதுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
(இ)	**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**			
(i)	நிதிப் பிரமாணம் 257	08 குழுக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,096,611 தொகைக்கான 99 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் சான்றுபடுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக செயற்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர் காலத்தில் நிதிப் பிரமாணங்களின்

				பிரகாரம் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை சான்றுபடுத்தலை உறுதிப்படுத்தக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 396	08 குழுக்களினால் வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத 06 மாதங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 217,177 தொகை பெறுமதியான 20 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(iii)	நிதிப் பிரமாணங்கள் 880 மற்றும் 881	20 குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளில் பணத்திற்கு பொறுப்பாக செயற்படக்கூடிய மற்றும் காசோலைகளில் கையொப்பமிடக் கூடிய உத்தியோகத்தர்களினால் பிணைத் தொகை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வைப்புச் செய்ய வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களும் விரைவாக பிணை வைப்புச் செய்ய வேண்டும்.
(ஈ)	2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயத்தின் சுற்றறிக்கையின் பந்தி 5.6(1)	கமநல வங்கிகளுக்குரிய அனைத்து கணக்குகளும் கமநல சேவைக் குழுக்களின் வருடாந்த இறுதிக் கணக்குகளில் உட்படுத்தப்பட்டு ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 20 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன்.	சுற்றறிக்கை 5.6(1) பந்தியின் அறிவுரையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(உ)	2018 மே 05 திகதிய 265/2018 இலக்கம் கொண்ட அரச கணக்குச் சுற்றறிக்கை மற்றும் 2023 பெப்ரவரி 15 திகதிய AGS/02-2023(1) இலக்கம்	குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் அடிப்படை "பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்" ஆக காணப்பட்ட போதிலும், குழுவொன்றின்	சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன்.	பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அவற்றை

கொண்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுற்றறிக்கையின் பந்தி 04	மற்றும் கமநல வங்கியொன்றின் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்கீட்டு அடிப்படை நிதிக்கூற்றுத் தொகுதியில் குறிப்பிடப்பட்டிருக்காததுடன், மேலும் 04 குழுக்களின் 02 கணக்கீட்டு அடிப்படைகளில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2024 ஆண்டில் 17 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 9,739,253 இற்கான மிகையொன்றும், 03 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 471,143 இற்கான பற்றாக்குறையும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ரூபா 7,343,884 தொகை மற்றும் ரூபா 3,453,095 தொகை காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் படி 19 கமநல வங்கியின் கூட்டுத்தொகை ரூபா 3,548,285 இற்கான மிகையொன்றும் ஒரு கமநல வங்கியல் ரூபா 569,419 இற்கான பற்றாக்குறையும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் 20 கமநல வங்கிகளின் மிகை ரூபா 4,242,822 தொகையாக காணப்பட்டது.

2.2 நிதி விளைவுகளின் பகுப்பாய்வு

(அ) 12 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 8,032,722 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப அந்த 12 குழுக்களின் முன்னைய ஆண்டின் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 6,116,251 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,916,471 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தல், நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தல், விற்பனை நிலையங்களின் வருமானம் அதிகரித்தல், செலவுகள் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

(ஆ) 05 குழுக்களின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 1,706,631 இற்கான மிகையொன்று காணப்பட்ட போதிலும், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறையின் கூட்டுப் பெறுமதி ரூபா 874,992 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,581,623 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தல், உர வருமானம் அதிகரித்தல், திருத்த வேலைச் செலவு குறைவடைதல், கட்டண வருமானம் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

(இ) 01 குழுவின் மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 82,382 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 1,209,693 தொகையாக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,292,075 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு வருமானங்கள் குறைவடைதல்கள், திருத்த வேலைச் செலவுகள் அதிகரித்தல், ஏனைய செலவுகள் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

(ஈ) 02 குழுக்களில் மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 388,761 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறையின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,578,109 தொகை காணப்பட்டதால், நிதி விளைவுகளில் ரூபா 2,189,342 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தல், ஏனைய வருமானங்கள் அதிகரித்தல், உரம் இறக்கும் செலவு குறைவடைதல் மற்றும் ஏனைய செலவுகள் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

(உ) 19 கமநல வங்கிகளின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,548,285 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் அந்த வங்கிகளின் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,942,502 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 394,217 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. அதற்காக கமநல வங்கி வருமானம் குறைவடைதல் மற்றும் செலவுகள் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது. மேலும், 2024 ஆண்டின் போது மொரன்துடுவ கமநல வங்கி மாத்திரம் ரூபா 569,419 இற்கான பற்றாக்குறையொன்றை அடைந்திருந்ததுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 300,320 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 869,739 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. அதற்காக கமநல வங்கியின் வருமானம் குறைவடைதல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விவசாய மற்றும் பெருந்தோட்ட தொழில் அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் இணைந்து செயற்படுத்தியிருந்த “ நிலைபேறான ஒரு இலட்சம் வீட்டுத்தோட்டங்களை ஏற்படுத்தும் செயற்திட்டத்தின்” கீழ் 15 குழுக்களைச் சேர்ந்த 423 பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 2933 விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள் மற்றும் கன்றுகள் இலவசமாக வினியோகிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் கன்றுகள் மற்றும் விதைகளுக்கு மேலதிகமாக மேலும் தேவையான உதவிகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கியிருக்காததுடன், இந்த செயற்திட்டம் தொடர்பாக குழுக்களினால் பேணப்பட்டு வந்திருந்த தவறுகளின் படி செயற்திட்டம்	ஏற்றுக்கொள்கின்றேன்.	முறைப் பிரகாரம் மேற்பார்வை செய்வதற்கும் அபிவிருத்தி செயற்திட்டங்களை வெற்றிகரப்படுத்துவதற்கும் ஒழுங்குறுத்தலுக்கு தேவையான அறிக்கைகள் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வெற்றியடைந்ததென்பதற்கான தகவல்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	மாவட்டத்தின் 11 கமநல சேவைக் குழுக்களுக்குரிய 65 விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளில் ஏக்கர் வரி அறவீடு செய்வதன் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன்.	ஏக்கர் வரி கால ரீதியாக அறவீடு செய்யாத உத்தியோகத்தர் தொடர்பாக முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரித் தொகையினை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2006 ஆண்டின் போது மேல் மாகாண, விவசாய மற்றும் காணி அமைச்சினால் 09 குழுக்களுக்கு கிடைத்திருந்த 09 கைடிரக்டர்கள், பல வருட காலம் முதல் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட டிரக்டர் வண்டிகளை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன்.	இந்த கைடிரக்டர்களை பயன்படுத்துவதற்கு அல்லது முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	நாகொட குழுவின் உருளைக் களி தோண்டும் காணியை மீண்டும் நாளதுவரை ஆக்கும் வரை ஒரு காணிக்காக ரூபா 1,000,000 தொகை மீண்டும் செலுத்தும் அடிப்படையில் வைப்புத் தொகையென தடுத்து வைக்கப்பட வேண்டியிருந்தது. 13 வைப்பாளர்களினால் கூட்டுத்தொகை ரூபா 13,000,000 இற்கான தொகையொன்று 2019 ஆண்டு முதல் பிணை வைப்பு என வழங்கப்பட்டிருந்தது. இந்த வைப்புத் தொகைகள் விடுவிப்பதற்காக தோண்டப்பட்ட கிடங்குகளை மூடி காணி பழைய நிலைக்கு ஆக்கி பயர்ச் செய்கை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், தொடர்ந்தும் அகழ்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட கிடங்குகள் முழுமையாக மூடப்பட்டிருக்காமை, பயிர்ச் செய்கை அலுவல்கள்	காணிகளை பழைய நிலைமைக்கு ஆக்கியிருக்காமையால் பிணை வைப்புக்கள் விடுவிக்கப்படவில்லை.	காணிகளை பழைய நிலைமைக்கு ஆக்கி பயிர் செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மேற்கொள்ளப்பட்டிருக்காமை, ஆகிய காரணங்களினால் சுமார் 06 வருட காலம் முதல் இந்தக் காணிகள் பழைய நிலைமைக்கு ஆக்கப்பட்டிருக்காமையால் சுற்றாடல் சேதங்கள் ஏற்பட்டிருந்தது.		
(உ)	புலத்சிங்கல கமநல சேவைக் குழுவில் 13 விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகள் தொடர்பாக கடமையாற்றும் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் ‘‘ஜியோகொவியா’’ தரவு முறைமைக்கு தகவல் உற்படுத்துவதற்கு தேவையான நில அளவை அலுவல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. அதன்படி, கடமையை புறக்கணித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன்.	முறையான விசாரணையொன்று நடாத்தி கடமை நிறைவேற்றாத உத்தியோத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் ‘‘ஜியோகொவியா’’ தரவு முறைமைக்கு தகவல்கள் உட்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	2024 ஆண்டின் போது 03 குழுக்களுக்குரிய விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளுக்காக விவசாய அமைப்புக்கள் நிறுவுவதற்கும் மற்றும் 03 குழுக்களில் நிறுவப்பட்டிருந்த 45 விவசாய அமைப்புக்கள் 2024 ஆண்டிற்காக பதவியினர் தெரிவு நடாத்தியிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன்.	விவசாய அமைப்புக்கள் நிறுவுவதற்கும் பதவியிணர் தெரிவு நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	19 கமநல சேவைக் குழுக்களில் 2024 ஆண்டின் போது ‘w’ தொகுதியில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் 17646 ஹெக்டயர் வயல் நிலங்களில் நெற்பயிர்ச் செய்கைகள் திட்டமிடப்பட்ட போதிலும், 10752 ஹெக்டயர்கள் மாத்திரம் நெற்பயிர்ச் செய்கைகள் மேற்கொண்டிருந்தமையால், இலக்கினை நெருங்குவதற்கு	எதிர் காலத்தில் நெற்பயிர்ச் செய்கையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	உத்தியோகத்தர்களின் மேற்பார்வையை விரிவுபடுத்தி பயிர்ச் செய்கை இலக்கினை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

	முடியாதிருந்ததுடன், அகலவத்த குழுவில் மாத்திரம் இலக்கினை மிகைத்து 216 ஹெக்டயர்கள் மிகையாக நெற்பயிர்ச் செய்யப்பட்டிருந்தது.		
(ஆ)	ஆண்டின் போது 16 கமநல சேவைக் குழுக்களில் 3185 ஏக்கர் தரிசு வயல்களில் நெற்பயிர்ச் செய்கைக்கான இலக்காக இருந்த போதிலும், வருட இறுதியளவில் 2695 ஏக்கர் தரிசு வயல்கள் அறுவடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 04 குழுக்களில் 61 ஏக்கர் இலக்கினை மிகைத்து தரிசு வயல்களில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.	தரிசு வயல் இலக்கினை 2025 ஆண்டில் நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	தரிசு வயல்கள் நெற்பயிச் செய்கையை முன்னேற்றுவதற்கு இலக்காகிய முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.
(இ)	2024 ஆண்டின் போது 20 கமநல வங்கிகளில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 444 "சிந்திப்போம்" மகளிர் நிகழ்ச்சித் திட்டங்களில் 382 நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்பட்டிருந்ததுடன், 62 நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் 99 இன் முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.	கண்டறிந்து 2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தாமைக்கு உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் அவற்றை செயற்படுத்துவதற்கும் திருப்திகரமான மட்டத்தில் செயற்படுத்தப்பட்டிருக்காத நிகழச்சித் திட்டங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	20 குழுக்களின் மூலம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 230,300,749 தொகை பயன்படுத்தப்பட்டு 345 சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மறுசீரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆண்டின் போது கூட்டுப் பெறுமதி ரூபா 94,863,617 தொகைக்கான 161 சிறு நீர்ப்பாசனச் செயற்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டிருந்ததுடன், 184 செயற்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ஆண்டின் போது நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய அமைப்புக்கள் மற்றும் ஏனைய	ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் மறுசீரமைப்பு அலுவல்கள் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்ற முடியவில்லை.	முறையான விசாரணையொன்று நடாத்தி செயற்திட்டத்தை செயற்படுத்தாத பொறுப்பான தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தலும், நெற்பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்காக சிறு நீர்ப்பாசன செயற்திட்டங்கள் திட்டமிட்டவாறு மறுசீரமைப்பதற்கும் அடுத்த ஆண்டிற்கான முறையான வேலைத்

	வெளித் தரப்பினர்களினால் கூட்டுப் பெறுமதி ரூபா 61,886,535 தொகைக்கான திட்டமிடப்படாத 78 சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டிருந்தன.		திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் 2024 மார்ச் 28 திகதிய 02/2024 இலக்கம் கொண்ட அலுவலகம் சார் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது 12 குழுக்களில் கடமையாற்றிய 146 உத்தியோகத்தர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 2,920,000 தொகை விசேட பண்டிகை கடன் என வழங்கப்பட்டிருந்தது. ஊழியர் ஒருவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் விழா முற்பணத்தை மிகைத்து வழங்கப்பட்டிருந்த இந்த விழா முற்பணம் வழங்கப்பட்டமையால் விவசாய வங்கிகள் நிறுவப்பட்ட குறிக்கோளாகிய விவசாயிகளுக்கு கடன் வழங்கும் குறிக்கோள் நிறைவேற்றப்படாமையும், அதற்காக வங்கியில் காணப்படும் திரவத் தன்மை குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.	இத் திணைக்களச் சுற்றறிக்கையின் படி கடன் வழங்கப்பட்டிருந்தது.	கமநல வங்கி நிறுவப்பட்ட குறிக்கோளாகிய விவசாயிகளுக்கு கடன் வழங்கல் முக்கியத்துவமாக கருதி கடன் வழங்கப்பட வேண்டும்.
(ஆ)	விவசாய வங்கியொன்றில் நாளாந்தம் கையிலிருக்கக்கூடிய பணத்தின் வரையறை ரூபா 50,000 ஆக காணப்பட்ட போதிலும், பெலவத்த விவசாய வங்கியின் 2024 ஆண்டின் நாளாந்தம் காசேட்டுப் பரிசோதனை செய்த போது ஆண்டு பூராகவும் அந்த வரையறையை மிகைத்து ரூபா 100,000 இற்கு மிகையான தொகையொன்று கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. 2024 மார்ச் 31 திகதி முதல் 2024 ஜுன் 11 திகதி வரை நாளாந்தம் சேகரிக்கப்பட்ட பணம் வங்கியில் வைப்புச் செய்யாமல், கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா	எதிர் காலத்தில் இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	வரையறையை மிகைத்து பணம் தடுத்து வைத்திருந்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் நாளாந்தக் காசு வரையறை ரூபா 50,000 எல்லையை வைத்திருந்து மீதித் தொகையை நாளாந்தம் வங்கியில் இடப்படுகின்றது என உறுதிப்படுத்தப்படக் கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாடு

	733,652 தொகையாகும். அவ்வாறு 02 மாதங்களுக்கு மிகையான காலம் ஒன்று நாளாந்தம் பணம் வங்கியில் வைப்புச் செய்யாமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தரை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கனன்வில கமநல வங்கியில் 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய செயற்திட்ட கடன் மீதி என 14 கடன்பட்டோர் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 612,887 இற்கான தொகையொன்று 2024 ஆண்டு நவம்பர் மாதத்தில் அறவீடு செய்யப்பட்டதென நாளாந்த பெறுவனவுப் பதிவேட்டின் படி உறுதிப்படுத்தப்பட்டது. 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த இந்த நிலுவைக் கடன் மீதிகளுக்குரிய நிலுவைத் தொகை ஒரே தடவையில் செலுத்தி தீர்த்தல் சர்ச்சைக்குரிய தன்மையுடைய கடன் அறவீடொன்றாக காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	இது தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பணம் முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருப்பின் குறிப்பிட்ட தரப்பினருக்கு முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 நிதியத்தின் குறை பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
08 கமநல வண்டிகளைச் சேர்ந்த 10 அரச வாணிப வங்கிக் கணக்கில் கூட்டுப் பெறுமதி ரூபா 7,449,542 இற்கான மீதியொன்று மற்றும் 11 குழுக்களுக்குரிய 17 அரச வாணிப வங்கிகளில் கூட்டுப் பெறுமதி ரூபா 10,808,871 இற்கான காசு மீதியொன்று 2024 ஆண்டின் போது ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டதுடன், அந்தப் பணம் ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்தும் வரை கூடிய வருமானம் ஒன்று கிடைக்கக் கூடிய முதலீட்டு வழியொன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்தப் பணம் கூடிய நலன்கள் கிடைக்கக்கூடிய முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பேன்.	முறையான அங்கீகாரம் ஒன்றின் கீழ் செயற்பட்டு இந்தப் பணத்தை ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	20 குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளினால் கணினி துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக 2023 ஆண்டு கூட்டுத்தொகை ரூபா 4,750,983 தொகை மற்றும் 2024 ஆண்டின் கூட்டுத்தொகை ரூபா 1,052,374 தொகையென கூட்டுப்பெறுமதி ரூபா 5,803,357 தொகை மாவட்ட அலுவலகங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2024 ஆண்டளவில் இந்தக் கணினி துணைக் கருவிகள் கிடைத்திருந்த போதிலும், பயன்படுத்துவதற்காக தேவையான விசேடத்துவமான கணினி மற்றும் கணினி மென்பொருள் குழுவில் காணப்படாமையால் அந்த உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் விளைவற்றுக் காணப்படுகின்றது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	முறையான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தி இந்த கணினி துணைக்கருவிகளை அலுவலக தேவைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	மொரன்துடுவ குழுவிற்கு 1997 ஆண்டின் போது ஜப்பான் உதவியின் கீழ் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் தவணை அடிப்படையில் செலுத்துவதற்காக அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஏட்டுப் பெறுமதி ரூபா 471,892 தொகைக்கான குபோடா டிரக்டர் 2019 ஆண்டு முதல் ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்தாமல் 06 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்று காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	இந்த டிரக்டர் குழுவின் மற்றும் விவசாயிகளின் கருமங்களுக்காக பயன்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றில் ஈடுபடுத்த வேண்டும்.
(இ)	கனன்வில குழுவிற்கு 2018 ஆண்டளவி கிடைத்திருந்த "Olic" இனத்தைச் சேர்ந்த ஒலி பெருக்கி இயந்திரமொன்று (Audio System) முகாமைத்துவத்தினால் ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்தாமையால், அந்தச் சொத்துகள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றேன். 2025 ஆண்டில் ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்துவேன்.	இந்த ஒலிபெருக்கி இயந்திரம் ஆக்கபூர்வமன கருமங்களுக்கு பயன்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றில் ஈடுபடுத்த வேண்டும்.

(ஈ)	பமுனுகம குழு வளாகத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நீர்த் தொட்டி ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	இந்த நீர்த்தொட்டியை ஆக்கபூர்வமாக பயன்படுத்ததுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று மேற்கொள்ள வேண்டும்.
(உ)	கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் வரகாகொட குழுவிற்கு வழங்கியிருந்த இரும்புப் பெட்டி 11 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயன்படுத்தியிருக்காததுடன், அந்த இரும்புப் பெட்டியின் பெறுமதி தொடர்பாக தகவல்களை பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்வதற்கு மற்றும் பண்டப் பதிவேடுகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திறக்க முடியாதுள்ளதுடன், அதற்கான அறிவுரைகள் வேண்டப்பட்டுள்ளது.	இருப்புப் பெட்டியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் பண்டப் பதிவேட்டில் உட்படுத்துவதற்கும் மற்றும் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	மதுராவல குழுவின் உரக் களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் நுழைவுப் படி வரிசையொன்று நிர்மாணிப்பதற்காக உரக் களஞ்சியத்தினுள் உர இருப்பை எடுத்து வருவதன் சிரமம் காரணமாக உரக் களஞ்சியத்தை பயன்படுத்தாமல் வேறு சிதைவடைந்த பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 07 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.	இந்த படி வரிசையின் காரணமாக உரத்தினை இறக்குவதற்கு மற்றும் ஏற்றுவதற்கு சிரமாக உள்ளது. திரவ உரம் மற்றும் பழைய புத்தகங்கள் மற்றும் காகிதாகிகள் வைக்கப்பட்டுள்ளது.	முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இந்தக் கட்டிடத்தை திட்டமிட்ட கருமத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	19 குழுக்கள் தொடர்பாக வி.ஆ.உ..உ. 556 பிரிவுகள் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட பிரிவுகளுக்காக இணைக்கப்பட்டிருந்த எண்ணிக்கை 394 ஆக காணப்பட்டமையால், அதன் காரணமாக 162 பிரிவுகளில் பதில் கடமை உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர்.	ஊழியர் பற்றாக்குறை காரணமாக பதில் கடமையாற்ற நேரிட்டிருந்தது.	பிரிவின் பணிப் பொறுப்புக்கள் சேவையின் தேவைப்பாடு மற்றும் உத்தியோகத்தர்களின் கொள்திறன் தொடர்பாக ஆய்வு செய்து பிரிவுகளின் விவசாயிகளுக்கு செயற்திறனுடனான சேவையொன்று வழங்குவதற்காக

			வெற்றிடங்களை நிரப்ப வேண்டும்.
(ஆ)	08 குழுக்கள் தொடர்பாக குழு எழுதுனர் பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றது.	ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக இந்த பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை.	பதவிகளில் பணிப்பொறுப்பு மற்றும் தேவைப்பாட்டை கவனம் செலுத்தி நிரந்தர உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்ச சட்டத்தில் பகுதி III பிரவு 16(2) மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய பீஈடீ.01/2021 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையில் காணப்படும் ‘‘செயற்பாட்டுக் கைநூலின்’’ பந்தி 6.6 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 19 குழுக்களின் நிதிக்கூற்றுக்கள் 60 நாட்களுக்கு மிகையான காலம் தாமதித்த பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன்.	2025 ஆண்டிறகாக நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் 60 நாட்களுக்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
20 குழுக்களின் 2024 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் திட்டம் மீண்டும் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற இலக்குகளுடன் ஒப்பீட்டு ரீதியாக பரிசோதனை மேற்கொள்ளக்கூடியவாறு மற்றும் குழுக்கனின் அனைத்து தொழிற்பாடுகளை உள்ளடக்கி இலக்காகிய வருமானம் மற்றும்	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	அனைத்துத் தொழல்பாடுகளையும் உள்ளடக்கி அடுத்த ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்ட தினத்தில் தாயரிக்கப்பட்டு எழுத்துமூலம் அங்கீகாரம் பெற்றக்கொள்வதற்கும் மற்றும் முன்னேற்ற அறக்கை

செலவுகள் வருட இறுதியில் உள்ளவாறான தொழில்பாடுகளுடன் பரிசோதனை மேற்கொள்ளக்கூடியவாறு அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.		தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5 கமநல வங்கிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	15 கமநல வங்கிகளினால் 261 விவசாயிகளுக்கு வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 6,215,367 இற்கான கடன் மற்றும் வட்டித் தொகை அறவிடப்படாமையால் தீர்மானம் எடுத்தலுக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,003,757 இற்கான தொகையொன்று மாத்திரம் அறவீடு செய்ய முடியுமாக இருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு ரூபா 4,881,454 தொகை அறவீடு செய்ய முடியாமல் காணப்பட்டது. எனினும், நீண்ட காலம் முதல் அறவிடப்பட முடியாமல் காணப்பட்ட இந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்பட்டிருக்கவில்லை.	இந்த நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு பௌதீக நடவடிக்கை முறைகள் செயற்பட்டு வருகின்றது.	நிலுவைக் கடன் தொகையை கால ரீதியாக அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், இந்த நிலுவைக் கடன் மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்
(ஆ)	20 கமநல சேவைக் குழுக்களில் கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டங்களின் மூலம் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பல்வேறு கடன் வகைகளின் கீழ் 3,413 விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 129,574,295 இற்கான கடன் தொகையொன்று காணப்பட்டதுடன், அந்தப் பணத்தின் 17 கமநல வங்கிகளிலிருந்து 05 வருடங்களை மிகைத்த ரூபா 6,380,043 இற்கான கடன் மீதியொன்றும் காணப்பட்டது.	இந்தக் பழமையான நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	- மேற்படி -

(இ)	வரையறுக்கப்பட்ட விசாயக் கம்பனியொன்றுக்கு கனன்வில கமநல வங்கியினால் 2000 ஆண்டில் வழங்கியிருந்த விவசாய கம்பனி ‘நிலுவைக் கடன்கள்’ தொகையாகிய கூட்டுத்தொகை ரூபா 854,900 இற்கான தொகை 24 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட போதிலும், அந்தக் கடன்தொகையை அறவீடு செய்வதற்காக போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்தக் பழமையான நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	- மேற்படி -
(ஈ)	08 கமநல வங்கிகளுக்குரிய 2024 ஆண்டிற்காக பேணப்பட்டு வந்த துணைப் பேரேட்டுக் கணக்குகளில் மீதிகள் நாளதுவரை ஆக்கிப் பேணிச் சென்றிருக்காத சந்தர்ப்பங்கள் அல்லது விவசாய வங்கி நிதிக்கூற்றுக்களுடன் கணககாய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பலவின வைப்புக்கள், தனிப்பட்ட வைப்புக்கள், பங்குகள் போன்ற அட்டவணைகளின் வைப்பு மீதிகள், வட்டி மற்றும் திரண்ட வட்டி சரியாக பதிவு செய்யப்பட்டு அவற்றை நாளதுவரையாக பேணிச் சென்றிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.	- மேற்படி -	கணக்கேடுகள் உரிய முறையில் பேணிச் செல்லாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், அட்டவணைகளில் வைப்பு மீதிகள், வட்டி மற்றும் திரண்ட மீதிகள் சரியாக நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	மொரன்டுவ கமநல வங்கியில் முன்னோடிச் செயற்திட்டத்திற்கு பொறுப்பாக கடமையாற்றிய விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர் விவசாய வங்கியின் முன்னோடிச் செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த 03 பொதுக் காசுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மற்றும் வேறு முறைகளை கையாண்டு ரூபா 1,051,518 இற்கான தொகையொன்றை முறைகேடாக பயன்படுத்தியிருந்ததென DAD/KL/SER/01/09 இலக்கம் கொண்ட 2024 நவம்பர் 25 திகதிய களுத்துறை மாவட்ட விவசாய அபிவிருத்தி உதவி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் கண்டறியப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	தாபனக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதன்படி, குறிப்பிட்ட பெண் உத்தியோகத்தரினால் 2024 நவம்பர் 29 திகதி விவசாய வங்கியின் முன்னோடிச் செயற்திட்ட கணக்கிலக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த் போதிலும், இந்த முறை கேட்டினை இனங்கண்டு ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2025 மே மாதம் வரை தாபனக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்குப் பதிலாக அந்த பெண் உத்தியோகத்தரை இடமாற்றம் செய்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.